**8. அங்கிவருணன் கதை**

அங்கிவருணன் அரசர்களில் ஒருவன். அறிவுந்திரு வும் அமையப்பெற்று விளங்கிய இவனுடைய ஆட்சி மாட்சி யுடையதாக விளங்கியது. நல்லொழுக்கத்தில் நனிசிறந்த வன் என்று எல்லோராலும் பாராட்டப்பெற்ற



இவன் இன்ப நுகர்ச்சியில் அளவுகடந்து சென்றான்; விலைமாதர் கூட்டுற வையும் கொண்டான். அவர்களுடைய பழக்கத்தால் கட் குடித்தலையும் மேற்கொண்டான். நாளடைவில் கள்ளுண் பழக்கம் மிகுதியாகிவிட்டது. அதனால் அறிவையும் இழந் தான். மனம் போனவாறு பிதற்றித் திரியலானான். இவனு டைய நிலையைக் கண்டதும் இவனுடைய பகையரசர்கள் எள்ளி நகையாடினர். இவனுக் கடங்கித் திறை செலுத்திக் கொண்டிருந்த சிற்றரசர்கள் இவனுக் கடங்காமலும் திறை செலுத்தாமலும் இவனை நாளும் இகழ்ந்து பேசலாயினர். நாடெங்கும் பரவிநின்ற இவனுடைய நற்புகழும் போன விடந்தெரியாமல் போய்விட்டது. இவனுடைய அவல நிலை கண்டோர் கள்ளுண்ணும் பழக்கத்தால் இவன் இத்தகைய நிலையை அடைந்தான் என்று உள்ளம் இரங்கினர். கள்ளினி டத்தில் விருப்பம் கொண்டொழுகுவோர் பகைவரால் அஞ் சப்பெறார்; புகழையும் இழந்துவிடுவார்கள் என்பது இவனி டத்தில் நன்கு விளங்கியது.

[கள்ளுண்டல்]